## பத்திரிக்கை செய்தி

கடலூர் மாவட்டம், சிதம்பரம் தாலுகா, பண்ணப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த தங்கசாமி மகன் சுரேஷ்பாபு என்பவர் தனது மாமா மகன் ஸ்ரீகாந்த் என்பவர் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யக்கோரி இ-சேவை மையத்தில் விண்ணப்பித்து பண்ணப்பட்டு கிராம நிருவாக அலுவலர் அவர்களை அணுகி தனது மனு சம்மந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்ட போது அந்த மனு மீது நடவடிக்கை மேற்கொள்ள ரூ.5000/- இலஞ்சமாக கேட்டதால் மேற்படி புகார்தாரர் சுரேஷ்பாபு என்பவர் கடலூர் லஞ்ச ஒழிப்பு துறையில் 23.03.2023 அன்று புகார் கொடுத்துள்ளார். புகார் அளித்ததின் பேரில் வழக்கு பதிவு செய்து இன்று 24.03.2023 தேதி சிதம்பரம் பெருமாள் கோவில் தெருவில் உள்ள சுப்புலட்சுமி காம்பளக்ஸ்-ல் உள்ள அறையில் வைத்து கிராம நிருவாக அலுவலர் புகழேந்தி என்பவர் சுரேஷ்பாபு என்பவரிடம் லஞ்சம் பணம் ரூ.5000/-த்தை கேட்டு பெற்ற போது திரு.தேவநாதன் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அவர்கள் தலைமையிலான காவல் பிரிவினர் கிராம நிருவாக அலுவலர் புகழேந்தி என்பவரை கையும், களவுமாக பிடித்து கைது செய்தனர். மேலும், கிராம நிருவாக அலுவலர் தனக்கு ஒதுக்கப்பட்ட கிராமத்தில் உள்ள அலுவலகத்திற்கு செல்லாமல் மேற்சொன்ன சிதம்பரம் பெருமாள் கோவில் தெருவில் உள்ள சுப்புலட்சுமி காம்பளக்ஸ்-ல் மாத வாடகைக்கு அறை எடுத்து தங்கி இருந்து அலுவலகம்போல் செயல்பட்டு வந்ததும், மேற்படி அதே அறையில் தண்டேஸ்வரநல்லூர், பெருங்காலூர் மற்றும் கொடியாளம் கிராமத்தைச் சேர்ந்த மூன்று கிராம நிருவாக அலுவலர்களும் அதே அறையில் அலுவலகம்போல் செயல்பட்டு வந்ததும் தெரிய வந்தது. மேற்சொன்ன கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் அனைவரும் தங்களின் மனுக்களின் மீதான நடவடிக்கை வேண்டி அனைவரும் இந்த தனியார் காம்பளக்ஸ் உள்ள அறைக்கு வந்து செல்வது வழக்கமாக இருந்தது. இது தொடர்பாக சிதம்பரம் வருவாய் வட்டாட்சியர் திரு.கோ.செல்வகுமார் அவர்கள் மேற்படி காம்பளக்ஸில் அலுவலகம் போல் இயங்கி வந்த அறையை சோதனை செய்து வட்டாட்சியர் அவர்கள் அந்த அறையை சீல் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகிறார்.

**PRESS NOTE**

**VILLAGE ADMINISTRATIVE OFFICER ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE Rs.5,000/- FOR RECOMMENDING PATTA NAME TRANSFER**

The complainant Tr.Suresh Babu, is residing at Oodai Street, Pannapattu, Chidambaram Taluk, Cuddalore District. The complainant had applied for patta name transfer for his land at E-sevai centre, for which Tr.Pugazhendhi, Village Administrative Officer, Pannanpattu, Chidambaram Taluk, Cuddalore District demanded Rs.5,000/- as bribe for processing his application. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Cuddalore detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. Today 24.03.2023, during the trap proceedings, the complainant gave the bribe amount of Rs.5,000/- to Tr.Pugazhendhi, Village Administrative Officer. The accused was arrested.